Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 8-12-1945 கார்த்திகை மீ 23உ { மலர் 9

## எல்லாப் பெண்களும் கற்பில்லாதவர்களா?

‡

(சித்திரபுத்திரன்)

ஆஸ்திகப்பெண்:- என்ன அய்யா நாஸ்திகரே! மனுதர்ம சாஸ்திரத்தில் மற்ற விஷயங்களைப் பற்றிய ஆட்சேபனைகள் எப்படி இருந்தாலும் பெண்களை கடவுளே விபசாரிகளாய் பிறப்பித்து விட்டார். ஆதலால் அவர்கள் விஷயத்தில் ஆண்கள் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்று சொல்லிஇருப்பதுமாத்திரம் பெரிய அயோக்கியத்தனம் என்பதே எனது அபிப்பிராயம். அது விஷயத்தில் நான் உங்களுடன்சேர்ந்து கொள்ளுகிறேன்.

நாஸ்திகன்:- அம்மா அப்படி தாங்கள் சொல்லக்கூடாது. மனுதர்ம சாஸ்திரத்தில் மற்ற எந்த விஷயங்கள் அயோக்கியத்தனமாக இருந்தாலும் இந்த விஷயத்தில் மனுதர்ம சாஸ்திரம் சொல்லுவதை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆ. பெண்:- அதென்ன அய்யா நீங்கள்கூட அப்படிச் சொல்லுகின்றீர்கள்? இதுதானா உங்கள் அறிவு இயக்கத்தின் யோக்கியதை? எல்லாப் பெண்களுமா விபசாரிகள்?

நா:-ஆம் அம்மா எல்லோருமே தான் "விபசாரிகள்". இதற்காக நீங்கள் கோபித்துக்கொள்வதில் பயனில்லை.

ஆ. பெண்:- என்ன அய்யா உலகத்தில் உள்ள பெண்கள் எல்லோரையுமா நீங்கள் விபசாரிகள் என்று நினைக்கிறீர்கள்.

நா:- ஆம். ஆம், ஆம். இந்த உலகத்தில் உள்ள பெண்கள் மாத்திரமல்ல, மேல் உலகத்தில் உள்ள பெண்களையும் கூடத்தான் நான் "கற்பு உள்ளவர்கள்" என்று சொல்லுவதில்லை.

ஆ. பெண்:- இப்படிச் சொல்லுவது தர்மமாகுமா!

நா:- கடவுளால் உண்டாக்கப்பட்ட வேதத்தின் சாரமான மனுதர்ம சாஸ்திரம் சொல்லுவது எப்படி பொய்யாகும்—அதர்மமாகும் சொல்லுங்கள் பார்ப்போம். வேண்டுமானால் அது சரியென்று நான் ருஜுப்படுத்தவும் தயாராய் இருக்கிறேன்.

ஆ. பெ. என்ன ருஜு நாசமாய்ப்போன ருஜு சற்று காட்டுங்கள் பார்ப்போம்.

நா:- நமது பெரியவர்கள் கற்பைப் பரீக்ஷிக்கத்தக்க பரீக்ஷைகள் வைத்திருக்கின்றார்கள். ஆதலால் அவர்களை நாம் சுலபத்தில் ஏமாற்றிவிட முடியாது.

ஆ. பெ:- என்ன பரீக்ஷை ஐயா அது.

நா:- சொல்லட்டுமா கோபித்துக் கொள்ளக் கூடாது.

ஆ. பெ:- கோபமென்னையா! மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயம். தாராளமாய்ச் சொல்லுங்கள்,

நா:- தெய்வம் தொழாள் கொழுனனைத் தொழுவாள் பெய்யெனப் பெய்யுமழை என்கின்ற பொய்யாமொழிப் புலவரின் வேத வாக்கைக் கேட்டிருக்கிறீர்களா!

ஆ. பெ:- ஆம், கேட்டிருக்கின்றேன்.

நா:- கற்புடைய மங்கையர்கள் மழை பெய்யென்றால் பெய்யும் என்கின்ற வேதவாக்கையும் கேட்டிருக்கின்றீர்களா.

ஆ. பெ:- ஆம், கேட்டு இருக்கின்றேன்.

நா:- சரி........ஊரில் மழை பெய்து மூன்று வருஷமாச்சுது. குடிக்கத் தண்ணீர் கிடையாது. தயவு செய்து ஒரு இரண்டு உளவு (2 அங்குலம்) மழை பெய்யச் சொல்லுங்கள் பார்ப்போம்.

ஆ. பெ:- இது நம்மாலாகின்ற காரியமா? தெய்வத்திற்கு இஷ்டமிருந்தாலல்லவா முடியும்? இந்த ஊர்காரர்கள் என்ன அக்கிரமம் பண்ணினார்களோ! அதனால் இந்தப் பாவிகள் மழை இல்லாமல் தவிக்கின்றார்கள்.

நா:- எந்தப் பாவி எப்படித் தவித்தாலும் நீங்கள் கற்புள்ளவர்களாயிருந்தால் மழை பெய்யென்றால் பெய்து தானே ஆகவேண்டும். அல்லது இந்த ஊரில் ஒரு கற்புள்ளபெண்ணாவது இருந்தால் மழை பெய்துதானே தீரவேண்டும். எப்போது பெண்கள் சொன்னால் மழை பெய்வதில்லையோ அப்போதே பெண்கள் எல்லாம் கற்புள்ளவர்கள் அல்ல—விபசாரிகள்" என்றுருஜுவாகவில்லையா? பொறுமையாய் யோசித்துப்

பாருங்கள். இதையெல்லாம் நான் சொல்லவில்லை. வேதங்களும் சாஸ்திரங்களும் சொல்லுகின்றன. ஆகையால் இனி மேல் சாஸ்திரங்களைப்பற்றிச் சந்தேகப்படாதீர்கள். அதிலும் ரிஷிகளும் முனிவர்களும் சொன்ன வாக்கியமும் கடவுள் சொன்ன வேதத்தின் சத்தாகியதும் இந்து மதத்திற்கு ஆதாரமானதும் மோட்சத்திற்கு சாதனமானதுமான மனுதர்ம சாஸ்திரம் பொய்யாகுமா? அதனால்தானே நான்கூட கல்யாணமே செய்துகொள்ளவில்லை.

ஆ; பெ: எதனால்தான்?

நா: பெண்களைக் கல்யாணம் செய்து கொண்டால் புருஷன்மார்கள் அவர்கள் விபசாரித்தனம் செய்யாமல் ஜாக்கிரதையாகக் காப்பாற்றவேண்டுமென்று மனுதர்ம சாஸ்திரத்தில் இருக்கிறதினால் தான்.

ஆ. பெ: பின்னை என்ன செய்கின்றீர்கள்.

நா: கடவுளோ பிறவியிலேயே பெண்களை விபசாரிகளாய்ப் பிறப்புவித்துவிட்டார். யார் காப்பாற்றிப் பார்த்தும் முடியாமல் போய்விட்டது. சாஸ்திரங்களின் நிபந்தனைப்படி ஒரு சொட்டு மழைக்கும் வழியில்லை. கற்பு உள்ள பெண் என்று தெரிவதற்கு மனித முயற்சியை மீறிய—நடக்க முடியாத காரியங்களைச் செய்து காட்டவேண்டுமென்று கதைகளும் எழுதி வைத்திருக்கிறார்கள்.

மழை பெய்யவைப்பவளும், வாழைத்தண்டை எரிப்பவளும், சூரியனை மறைப்பவளும், இரும்புக் கடலையை வேகவைப்பவளுமே பத்தினிகள் என்று 'லைசன்ஸ்' பெற முடிகிறது. ஆதலால் எவனோ கட்டிக்கொண்டு காப்பாற்றட்டும். கடவுள் செயல் பிரகாரம் நமக்கு கிடைப்பது கிடைக்கட்டும், என்பதாகக் கருதி 'சிவனே' என்று உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றமாட்டானா, என்கின்ற தைரியம் உண்டு.

ஆ. பெ: அப்படியானால் நீங்கள் முன் சொல்லிக் கொண்டிருந்ததில் ஒன்றும் குற்றமில்லை. இந்த மனுதர்மசாஸ்திரமும் வேதமும், ஏ முதலியவைகளும் மொழியும், நீதியும்

# தீபாவளி கொண்டாடாத தீரர்கள்

## 10,000 தோழர்கள் கையொப்பங்கள் வந்துள்ளன!

(சென்றவாரம்வரை 6000 பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இடமின்மையாலும், பலர் கையெழுத்துக்கள் கண்டு பிடிக்க முடியாமலிருப்பதாலும் சுமார் 1000 தோழர்களின் பெயர்கள் மட்டுமே இந்தவாரம் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்கள், இவர்கள்!)

சேங்கம்:-

ஜி முத்துசாமி ஆர் வெங்கடாசலம் பி எஸ் கண்ணன் போ வரதாசலு வி எம் சாமிநாதன் பி வெங்கட்ராமன் எம் கோவிந்தசாமி கோவிந்தராசு சி எத்திராஜலுநாயுடு கேசவலு ஆர் ரெங்கசாமி எம் நடேசன் எம் வெங்கட்ராமன் பழனிவேலு வி எஸ் கெஜராஜன் மாதவன் ராமசாமி எஸ் வேணுகோபால் அருணாசலம் பி எஸ் ராசமாணிக்கம் என் ரங்கசாமி சொர்ணவேல் தர்மாம்பாள் செங்கமலம்.

கோவடி கிராமம் (திண்டிவனம்)

ஒய் வேணுகோபால் சுப்பராயகவுண்டர் எம் மதுரைக்கவுண்டர் என் சேதுராமன் ரா வெங்கடேசன், ச. பூபாலன் ஆ தங்கவேல்.

மாயவரம்:

தீ ப நாதன் ப லட்சுமிகாந்தம் டி எஸ் அருணாசலம் ராமச்சந்திரன் ரா கிருட்டினன் எஸ் சண்முகம் கே கல்யாணசுந்தரம் ஜி சவுந்தரராசன் கருப்பையன் எஸ் எஸ் மணி கைலாசம் எம் ராமசாமி எஸ் என் சாமி ஆர் சி பெரியசாமி ஆ சாமிநாதன் எம் ஆரோக்கியசாமி எம் வி கிருஷ்ணன் வி பாலையா ஜி ராசாராமன் ஜி கணேசன் ரெங்கராசன் எம் சாமிநாதன் மா இராமலிங்கம் பி சுந்தரம் ஆர் சௌரிராசன் எஸ் ரெத்தினம் என் சுப்ரமணியம்.

சி சொர்ப்பநந்தல் கிராமம்:

(செங்கம்)

எம் கே குருசாமி எம் ஆர் சங்கரன் நாராயணசாப குமாரசாமி டி கே கோவிந்தன் ஆர் நாராயணசாமி எம் சுப்புநாயுடு

சென்னை பேரம்பூர் பேரக்ஸ்:-

வி வி முருகேசபாகவதர் சி குருசாமி எம் பெருமாள் திருவேங்கிடம் கோவிந்தராசு தா பெரியதம்பி பி ஜிதேந்திரன் என் எஸ் தங்கரூபன் எஸ் வி கிருஷ்ணசாமி எம் பாலராசன் ஆர் கே முனுசாமி பி பெருமாள் பி தையநாயகி ச திருநீலகண்டர் எஸ் ஆ அய்யாவு கே பி சாமுண்டீஸ்வரன் ஏ சி டி மூர்த்தி செங்கல்வராயன் ஏ பெருமாள் ராஜன் ஆதிமூலம் இ கிருஷ்ணன் ஆர் முனுசாமி எம் குப்பம்மாள் எஸ் எஸ் ராகவேலு கண்ணப்பா சி எம் வி ஏழுமலை சி எம் வி அமிர்தம்மாள் சி தங்கராஜ்.

இருகூர்

சி நாராயணசாமி பி பெருமாள் குருசாமி குப்பண்ணன் உருமன் கருப்பண்ணன் நஞ்சப்பன் ராமசாமி ஆறுமுகம் மருதன் வெ வெங்கிடாசலம் அருணாசலம் ரங்கசாமி பி வீரப்பன் எஸ் கணேசன் சின்னப்பன் கிருஷ்ணன் சுப்ரமணியன் பி தேசிகன் என் ஆறுமுகம் அய்யாசாமி வி பெருமாள் காளியண்ணன் ருக்மணி கே பிச்சமுத்து நாகராசன் ஏ மாரியாயி மாரியப்பன் குப்புசாமி வி ஆறுமுகம் பாலாம்பாள் ரங்கசாமி ராமசாமி நடராஜன் பொன்னையன் நஞ்சாத்தாள் வேலுமயில் பி குமாரசாமி பி சண்முகம் என் சுந்தரம்மாள் பி மாரியப்பன் வேலன் ஆறுமுகம் ராமசாமி வீரப்பன் பி ஆறுமுகம் கே கணபதி வீரப்பன் அங்கமுத்து கே மருதாசலம் மாரிமுத்து வள்ளியம்மாள் எம் கே மணி ஆறுமுகம் முத்துசாமி இல்வேஸ்திரி சுப்ரமணியம் டி கிட்டு தீவிரம் ப கணபதி பெருமாள் சாமிநாதன் நஞ்சப்பன் பி கருப்பண்ணன் என் ராயப்பன் என் கருப்பண்ணன் பி தெய்வானையம்மாள் பி வேலம்மாள் பி பாப்பம்மாள் தங்கம்மாள் கே மீனாட்சி எம் மதுரை மீனாட்சி வி சிரங்கம்மாள் பி ருக்மணி பி பழனிபம்மாள் கே ராமபாரதி பி ரத்தினாம்பாள் கந்தசாமி பி சுப்ரமணியம் பி ராமசாமி கே நஞ்சைய வாத்தியார் கருப்பண்ணன் பொன்னப்பன் அய்யாசாமி என் அருணாசலம்.

காரைக்குடி: (முன் தொடர்ச்சி)

எம் பரமசிவம், நா ராமசாமி சி சொக்கப்பன் பி கன்னையா பி கே சேமத்துரை சு சக்கரை பே ச பேச்சிமுத்து ராமதி பாண்டியன் எஸ் தாளைமுத்து பாண்டியன் எஸ் ராமச்சந்திரன் ஆர் சுப்ரமணியம் வா மு பொ பாலையா, சி குருசாமி மு. முனியசாமி சி. பி. ராமகிருஷ்ணன் சீனிவாசகம் சின்னச்சாமி கிருஷ்ணன் மாரிமுத்து தில்லையா ச ஆவணி ராம

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

இவற்றை உண்டாக்கியதோ அல்லது ஒப்புக்கொண்டதோ ஆனகடவுள்களும் நாசமாய்ப்போகட்டும். இனிமேல் இந்த ஆஸ்திகம் நமக்கு வேண்டவே வேண்டாம். நமது எதிரிகள் நாட்டுக்கும் வேண்டாம்.

# பெரியார் சுற்றுப்பிரயாணம்

## மாபெருங் கூட்டங்கள்! மக்களிடையே மட்டற்ற உற்சாகம்!

குற்றாலத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களை திருநெல்வேலி ஜில்லா, கள்ளிகுளத்திற்கு வரவேண்டுமென அவ்வூர் திராவிடத் தோழர்களும், திருநெல்வேலி ஜில்லா திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் தோழர் கே. எம். பிரம்மநாயகம் அவர்களும் வேண்டிக் கொண்டதின் பேரில் பெரியார் அவர்கள் 1-12-45-ந் தேதி காலை 9 மணிக்குத் தென்காசியிலிருந்து பஸ்ஸில் பெரியார் தோழர் ஈ. வி. கிருஷ்ணசாமி, தோழர்கள் மணி அம்மையார், ஏ. சங்கரையா ஆகியவர்களுடன் திருநெல்வேலிக்குப் பகல் 12 மணிக்கு வந்தார்.

### திருநெல்வேலியில் வரவேற்பு

திருநெல்வேலி குமாரவிலாஸ் ஓட்டலில் பெரியார் அவர்கள் வந்து தங்கியிருக்கிறார் என்று தெரிந்ததும் திருநெல்வேலி ஜில்லா திராவிடர் கழகத் தலைவர் தோழர் எ. வி. முத்தையா அவர்களும், திருநெல்வேலியிலுள்ள திராவிட இயக்கத் தோழர்களும் ஏராளமாக வந்து மலர் மாலை சூட்டி இயக்கத்தின் எதிர்கால வேலைகளைப் பற்றியும், கறுப்பு சட்டைப் படையின் நோக்கம் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பின் பெரியார் அவர்கள் பகல் உணவு தோழர் பிரமநாயகம் அவர்கள் குமார விலாசிலேயே அருந்தி விட்டு கள்ளிகுளத்திற்குப் போவதற்காக திருநெல்வேலியிலிருந்து வள்ளியூருக்குத் தமது சகாக்களுடன் காரில் சென்றார்.

### வள்ளியூரில் வரவேற்பு.

கள்ளிகுளத்திற்கு 3 மைலுக்கு முன்பிருந்த வள்ளியூருக்குக் காரில் பெரியார் அவர்கள் தமது சகாக்களுடன் வந்ததும் இயக்கத் தோழர்கள் ஏராளமாகக் கூடி மலர் மாலை சூட்டி வரவேற்று சிறிது நேரம் இயக்க சம்மந்தமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பின் பெரியார் கள்ளிகுளத்திற்குப் புறப்பட்டார். கள்ளிகுளத்தில் பெரியார் அவர்களை வெகு உற்சாகமாக வரவேற்று அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்கு அழைத்துச் சென்றார்கள். பெரியார் அவர்கள் கள்ளிகுளத்திற்கு வருகிறார் என்று அறிந்த நாகர்கோயில், சாத்தான்குளம் முதலிய சுற்றுப்பக்கங்களிலிருந்து ஏராளமான இயக்கத் தோழர்கள் வந்திருந்தார்கள்.

### பொதுக் கூட்டம்

இரவு உணவிற்குப் பின் நாடக மேடைபோல் அலங்காரமாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் இரவு 9 மணிக்கு பொதுக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கூட்டத்திற்கு நாகர்கோயில் முதல் சுற்றுப்பக்கங்களிலிருந்து வந்த மக்கள் உட்பட சுமார் 5000 பேர்களுக்கு மேலான ஆண்களும், பெண்களும் கூடியிருந்தார்கள். இயக்கத் தோழர்கள் சிலர் பாடினார்கள்.

தோழர் சேக் அவர்கள் பிரரேபிக்க, தோழர்கள் அருணாசலம், சிங் முதலியோர் ஆமோதிக்க தோழர் பிரமநாயகம் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் அவர்களுக்கும், பெரியார் அவர்களுக்கும் கள்ளிகுளம் திராவிடர் கழகத்தின் சார்பில் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. ஏராளமான மாலைகள் அணியப்பட்டன. தலைவர் தோழர் பிரமநாயகம் அவர்கள் முகவுரையாகப் பேசும்போது திராவிடநாடு பிரியவேண்டிய அவசியம் பற்றியும், திராவிட இன ஒற்றுமை பற்றியும், மிக விளக்கமாகப் பேசினார். பின் தோழர்கள் மதியழகன், மு. கருணாநிதி, மணியம்மை ஆகியவர்கள் திராவிட இயக்கத்தின் வேலைகள் பற்றியும், திராவிடர்கள், திராவிடப் பெண்கள் ஆகியவர்களின் கடமையைப் பற்றியும் பேசினார்கள்.

### பெரியார்

பின் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நீண்ட கைதட்டலுக்கிடையே எழுந்து திராவிடர் கழகம் ஏன் தோன்றியது, திராவிடரின் இன்றைய நிலை, கறுப்பு சட்டைப் படையின் வேலை இவைகள் பற்றி மிக விளக்கமாக சுமார் 2 மணி நேரம் பேசினார். சில தோழர்கள் கேட்ட கேள்விகளை வரவேற்று அவைகளுக்குத் தக்க பதிலளித்தார்.

(பெரியாரின் சொற்பொழிவு பின்னர் வரும்)

பின் பாகவதர்—கிருஷ்ணனை விடுதலை செய்யவேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 12 மணிக்குக் கலைந்தது.

### வள்ளியூரில் கூட்டம்

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 2-12-45-ந் தேதி காலை 9 மணிக்கு கள்ளிகுளத்திலிருந்து தமது சகாக்களுடன் வள்ளியூருக்கு வந்தார். அங்குள்ள தோழர்கள் மிக ஊக்கத்துடன் வரவேற்று தோழர் ராமலிங்கம் அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு காலை உணவு முடிந்த பின் வள்ளி டாக்கீசில் பாகவதர்—கிருஷ்ணன் விடுதலைக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் பாடினார்கள். கூட்டத்திற்கு தோழர் டி. சிவசுப்பிரமணியத் தேவர் தலைமை வகித்தார். தலைவர் முகவுரையாகப் பேசும்போது பாகவதர்—கிருஷ்ணன் நாடகம், இசை, சினிமா முதலிய கலை உயர்வுக்குப் பாடுபட்டு வந்ததைக் குறித்தும் அவர்களை சர்க்கார் விடுதலை செய்ய வேண்டியது பற்றியும் பேசினார். பின் தோழர் மு. கருணாநிதி, மதியழகன் ஆகியவர்கள் பாகவதர்—கிருஷ்ணன் 'கலையுலகில் செய்த புரட்சி' என்பது குறித்துப் பேசினார்கள்.

பின் பெரியார் அவர்கள் நீண்ட கைதட்டலுக்கிடையே பேசும்போது கிருஷ்ணன்—பாகவதர் மீது நடந்த வழக்கு சரியாக தற்கால நாகரீகத்திற்கு ஏற்ப நடக்கவில்லை என்றும், காட்டுமிராண்டி மக்களை அடக்க ஏற்படுத்தப்பட்ட பழங்கால சட்டப்படி அவர்களை வெளியில் விடாத்

## திருச்சி மாகாண ஜஸ்டிஸ்—சு. ம. மாநாடுகள் வசூல் வரவு செலவு

| | | |
|---|---|---|
| 1. | தஞ்சை | 2000—0—0 |
| 2. | கோவை | 1532—0—0 |
| 3. | திருச்சி | 1383—0—0 |
| 4. | தென்னாற்காடு | 1029—0—0 |
| 5. | சேலம் | 981—0—0 |
| 6. | ராமநாதபுரம் | 953—0—0 |
| 7. | வடாற்காடு | 697—0—0 |
| 8. | திருநெல்வேலி—நாகர்கோவில் | 665—0—0 |
| 9. | மதுரை | 613—0—0 |
| 10. | செங்கற்பட்டு | 215—0—0 |
| 11. | மதராஸ் | 155—0—0 |
| 12. | பெங்களூர் பூனா முதலியன | 80—0—0 |
| | கேட்டில் சில்லரை வசூல் | 1259—0—0 |
| | வரவு | 11542—0—0 |
| | செலவு | 5154—0—0 |
| | நீக்கி இருப்பு | 6388—0—0 |

இனியும் இரண்டொரு வரவும் செலவும் கணக்கு வரவேண்டியது இருக்கிறது.

இந்தத் தொகை ஈரோட்டில் 1702
திருச்சியில் 4686

6388

அவர்களது உண்மையான நிலைமையைக் கூற முயற்சி எடுக்கப் போதிய வசதி இல்லாது அடைத்து வைக்கப்பட்டிருந்ததென்றும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை பெரிதும் குற்றத்திற்காக வல்ல என்றும் சட்டக் கோளாறினாலேயே தண்டிக்கப்பட்டிருக்கிறதென்றும், இப்போதுள்ள கிரிமினல் சட்டமே திருத்தப்பட வேண்டுமென்றும் கூறி பாகவதர்—கிருஷ்ணனின் கலைச் சேவைகளைப் பாராட்டி 1 மணி நேரத்திற்கு மேல் பேசினார். பாகவதர்—கிருஷ்ணனை விடுதலை செய்யவேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் தலைவர் முடிவுரையுடனும், நன்றிகூறுதலுடனும் கூட்டம் கலைந்தது.

பெரியார் அவர்கள், தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி, தோழர்கள் மணியம்மை, மு. கருணாநிதி, சங்கரய்யா ஆகியோருடன் அங்கிருந்து திருநெல்வேலிக்கு வந்து தங்கி இருந்து காரில் 2-ந் தேதி இரவு குற்றாலம் வந்து சேர்ந்தார்.

### பெரியார் குற்றாலத்திலிருந்து புறப்பாடு

ஓய்விற்காகக் குற்றாலத்தில் 10 தினங்கள் தங்கியிருந்த பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 3-12-45-ந் தேதி பகல் 1 மணிக்கு தென்காசியிலிருந்து புறப்பட்டார்

### ராஜபாளையம்

பெரியார் அவர்கள் வருவதை அறிந்த ராஜபாளையம் திராவிட இயக்கத் தோழர்கள் மிக உற்சாகமாக வரவேற்று மலர் மாலை சூட்டினார்கள். ரயில் புறப்படும் வரை இயக்க விஷயமாகப்பேசிக் கொண்டிருந்தார்கள்.

### விருதுநகர்

பெரியார் அவர்கள் ஏறிவந்த ரயில் விருதுநகர் வந்ததும் அருப்புக் கோட்டை தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி அவர்களும், மற்ற தோழர்களும் வரவேற்று சிறிது நேரம் இயக்க எதிர்கால வேலைகளைப் பற்றியும், சமீபத்தில் நடைபெறப் போகும் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் வரும் விஷயங்கள் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள். பின் பெரியார் அவர்கள் அதே வண்டியில் மதுரைக்குப் புறப்பட்டார்கள். பெரியார் அவர்கள் 4-12-45-ந் தேதி காலை மதுரை வருவதாக அறிவித்திருந்தார். அவர் திடீரென 3-ந் தேதி 7 மணிக்கு மதுரையிலிறங்கி மதுரை ஜில்லா திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் தோழர் சுக்குனி அவர்கள் வீட்டிற்குச் சென்றார். பெரியார் அவர்கள் வந்திருக்கும் விஷயம் தெரிந்த இயக்கத் தோழர்கள் வந்திருந்து இரவு 11 மணி வரை பேசிக்கொண்டிருந்தார்கள்.

### மதுரையில் கூட்டம்

மதுரை அழகரடியில் அழகரடி திராவிடர் கழகத் திறப்பு விழா 4-12-45-ந் தேதி மாலை 4 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்தில் ஒலிபெருக்கியும் அமைக்கப்பட்டிருந்தது. (20000) இருபது ஆயிரம் பேர்கள் வந்து கூடினார்கள்.

கூட்டத்திற்கு தோழர் சுக்குனி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பெரியார் நீண்ட கைதட்டுதலுக்கிடையில் திராவிடர் கழகம் ஏன் ஏற்படவேண்டும். திராவிடர் கழகம் செய்யப்பட வேண்டிய வேலை, திராவிடர்களுடைய இன்றைய நிலை, கறுப்பு சட்டைப் படை செய்யவேண்டிய வேலைகளைப் பற்றிச் சுமார் 2 மணி நேரம் பேசி கழகத்தை திறந்துவைத்தார். இக் கழகத்தார் பெரியார் அவர்கட்கு கறுப்பு நூல் மாலை அணிவித்தார்கள். (பெரியார் பிரசங்கம் பின்னர் வரும்)

பெரியார் அன்றிரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் திருச்சி புறப்பட்டார். ரயிலுக்கு நூற்றுக்கணக்கான மக்கள் வந்து வெற்றி முழக்கம் செய்தார்கள். மதுரைக் கூட்டத்தில் பல தோழர்கள் கறுப்பு சட்டையுடன் தோன்றினார்கள்.

---

## திருச்சி மருத்துவர் சங்க 22ம் ஆண்டுவிழா

### பெரியார் தலைமை வகித்தார்

திருச்சி ஜில்லா மருத்துவர் சங்க 22ம் ஆண்டுவிழா திருச்சி வரகனேரி மருத்துவர் சங்கத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெரி

(தொடர்ச்சி 01ம் பக்கம்)

ஆராய்ச்சி நூல்க அறக்கட்டளை

## நடக்க இருப்பவை !

● பொன்மலையில் 12-12-45 வியாழன் மாலை 6 மணிக்கு திராவிட வாலிபர் கழக தோட்டத்தில் தலைவர் ஜி. பராங்குசம் தலைமையில் அங்கத்தினர்கள் பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் ஜி. பரமசிவம் ஆரோக்கியசாமி முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள். வருக தோழரே!

● 10-12-45 திங்கள் மாலை 6-மணிக்கு கூடலூர் ஒ. டி. பகுத்தறிவுக் கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) பேசுவார்.

● 11-12-45 செவ்வாய் மாலை 7மணிக்கு குறிஞ்சிப்பாடி திராவிடர் கழக பொதுக்கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் பி. ஏ. [ஆனர்ஸ்] பேசுவார்.

● 16-12-45 மாலை 5 மணிக்கு திருநெல்வேலி டவுன் வடக்கு ரத வீதி நயினார் குளம் தெரு கழக மேடையில் ஒரு ஆலோசனைக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் நெல்லை ஜில்லா திராவிடர் கழக மாநாட்டை வரும் ஜனவரியில் கூட்டுவதுபற்றி யோசிக்கப்படும். அனைவரும் வருக வருக.

● 12-12-45 காலை 10 மணிக்கு தேனி லட்சுமி டாக்கீஸ் கொட்டகையில் வர்த்தக குமாஸ்தாக்கள் சங்க 2-வது ஆண்டு விழா நடைபெறும்.

● 9-12-45 ஞாயிறு மாலை 5மணிக்கு வட சென்னை திராவிடர் கழக பொதுக்கூட்டம் இராயபுரம் கல்மண்டபத்தை அடுத்த துலுக்கன் தோட்டம் 4வது சந்து துவரைக்களத்தில் நடைபெறும். தோழர் தா. பெரியசாமி தலைமை வகிப்பார். பல தோழர்கள் பேசுவார்கள். அனைவரும் வருக.

### சென்னை ஜில்லா 6-வது சுயமரியாதை மாநாடு

15-12-45 சனி காலை 8 மணி முதல் மாலை 3-30 வரை சென்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெறும். கும்பகோணம் தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமை வகிப்பார்.

தலைவர் பெரியார், தளபதி சி. என். அண்ணாதுரை, கே வி. அழகிரிசாமி, கோலார் அப்பாதுரையார், பாரதிதாசன், அன்பழகன், நெடுஞ்செழியன், ஜனார்த்தனம், கஜேந்திரன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

வரவேற்பு: ரூ. 1-0-0

பிரதிநிதிகள், பார்வையாளர் அணா 4.

குறிப்பு: தீர்மானங்கள் அனுப்பு

### பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் வடஆற்காடு சுற்றுப் பிரயாணம்.

9-12-45 திருவத்திபுரம் மாநாடு
10— அசனம்மா பேட்டை
11— வாழ்குடை
12— வந்தவாசி
13— வாணியம்பாடி.

### கோவை மாவட்ட திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) 6-வது மாநாடு

23-12-45 பொள்ளாச்சி நாராயண டாக்கித் தியேட்டரில் நடைபெறும்.

தலைவர்: தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. ராமசாமி,

கொடியேற்றுபவர்: தோழர் அர்ச்சுனன்.

மற்றும் பல தோழர்கள் கலந்து கொள்வார்கள்.

வோர் 12-12-45-க்குள் மாநாட்டுக் காரியதர்சிகளுக்கு அனுப்ப வேண்டும்.

### அறிவிப்பு

"குடி அரசு", 'பகுத்தறிவு' நூற்பதிப்புக் கழக வெளியீடுகள் கீழ்க்கண்ட இடத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

சாது நிலையம்,
159. காலி ரோடு,
கொள்ளுபிட்டி, கொழும்பு.

### ராம ராஜ்யம்?

லால்குடி ஹரிஜனமாணவ விடுதி மாணவத் தோழர் கே. ஆர். மருதையா திருச்சி மாநாடுகளில் கலந்து கொண்டதற்காக விடுதியின் வார்டன் தோழர் கந்தசாமி ஹரிஜனசேவா சங்க காரியதரிசி எல். என். கோபால்சாமி (பார்ப்பனர்)க்கு ரிப்போர்ட் எழுதி மேற்படி மாணவரை விடுதியினின்றும் நீக்கி விட்டார். இதே கோபால்சாமி (பார்ப்பனர்)தான் திருச்சி ஹாஸ்டல் மாணவர்களைக் கேவலமாக நடத்தி அம்பேத்கார் ஹாஸ்டல் ஏற்பட காரணமாயிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது பெயர்தான் திருப்பரங்குன்றத்து மாநாட்டிலும் பிரபல்யமாக அடிபட்டது என்பதை நினைவூட்டுகிறோம். கந்தசாமிகள் விபீஷணர்களாக இருக்கும் வரை கோபால்சாமிகளின் ஆட்சி முடிந்தா விடும்? (மு)

### செல்வம் மளிகை

மறைந்த பன்னீர் செல்வம் நினைவாக தோழர்கள் நா. ரெங்கையா, பொ முத்துசாமி இருவரும் "செல்வம் மளிகை" என்ற பல சரக்கு மண்டி யொன்றை திருச்சி ஜெனரல் மார்க்கட் கீழவாசலில் 26-11-45ல் ஆரம்பித்துள்ளதை முன்னிட்டு குடிஅரசு, திராவிடநாடு, திராவிடமணி, தொழிலாளர் மித்திரன் ஆகிய இதழ்களுக்கு முறையே 1 ரூபாய் நன்கொடை அளிக்கப் பட்டது.


கடல்கடந்த நாடுகளில் குடியேறும்வேலை-வெற்றிக்காக போரிடுவதைவிட மிகக் கடினமாக இருக்கும்

**மே. த. கவர்னரின்**

சௌகரியங்கள்—கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு மென்மேலும் நன்கொடை கொடுத்துதவுமாறு உருக்கமாக வேண்டுகோள் விடுகிறது.

ஏனென்றால்

இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளுக்கு சௌகரியங்கள் மிகமிக அவசியமாக தேவைப்படுகின்றன.

★

எனவே

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு தயவு செய்து பணம் அனுப்பி கொடுக்கவும்.

# திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்.

## அழைப்பு

ஐயா,

நாளது டிசம்பர் மாதம் 16-ம் தேதி(16-12-45) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சென்னையில் கந்தசாமி கோயிலுக்கு அருகில் உள்ள சத்திரத்தில் திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாக அங்கத்தினர் கூட்டம் நடைபெறும். அதுசமயம் நமது கட்சியின் நடைமுறை வேலைகள்பற்றியும், நடைமுதல் வருஷத்திய பட்ஜட் வரவு செலவு திட்டம் முதலிய காரியங்கள்பற்றியும் யோசித்துத் தீர்மானிக்கப்படும். ஆகையால் தாங்கள் அவசியம் வரவேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன்.

ஈரோடு,
1-12-45.

ஈ. வெ. ராமசாமி
தலைவர்.

---

# குடி அரசு

1945-ஆம் டிசம்பர் ௴ 8-உ

## மத்திய சட்டசபை தேர்தலில் நின்றதின் பயன்

ஜஸ்டிஸ்கட்சியார் சட்டசபை தேர்தலை பகிஷ்கரித்து இருக்கிறார்கள். இதை ஏற்றுக்கொள்ளாத ஒரு கூட்டத்தார் கட்சியில் இருந்து வெளியேறி தங்களை ஜஸ்டிஸ் கட்சியார் என்று போலியாக சொல்லிக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர் என்று ஒரு நபரை நிறுத்தி தேர்தலில் போட்டி போட்டார்கள். முடிவில் தேர்தலில் எதிர் அபேட்சகருக்கு கிடைத்ததில் 4ல் ஒரு பங்கு ஓட்டுகூட பெறாமல் படுதோல்வி அடைந்தார்கள். இந்த தோல்விக்கு அப்புறம் அக்கூட்டத்தாரின் நிலைமை என்ன ஆயிற்று என்று பார்க்கவே இதைக் குறிப்பிடுகிறோம்.

தேர்தலுக்கு நிறுத்தப்பட்ட நபர் தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் "ஜஸ்டிஸ் கட்சியை ஜனங்கள் விரும்பவில்லை, பார்ப்பனரல்லாதார் ஓட்டுச் செய்யவில்லை ஆதலால் அவர்கள் நலத்துக்கு ஏற்படுத்தப்பட்ட கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியை கலைத்துவிடவேண்டியது மிகவும் அவசியமான காரியமாகும்" என்று அறிக்கைவிட வேண்டியவராக ஆகிவிட்டார். "கட்சித் தலைவருக்கு"ம் ஆணை இட்டு விட்டார். இப்போது இந்த அறிக்கையை சாக்காக வைத்துக் கொண்டு எதிரிகள் கூத்தாடி ஜஸ்டிஸ் கட்சியை பரிகாசம் செய்கிறார்கள்—இந்த போலி ஜஸ்டிஸ் கூட்டமும் இந்த தோற்றுப்போன அபேட்சகர் பேச்சை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு கட்சியைக் கலைத்து விடுவதே மேல் என்று சொல்லிக் கொண்டு "கட்சியை" கலைக்க நாள் பார்க்கிறார்கள் போல் தெரிகிறது. ஏதோ ஒரு நாளைக்கு கலைத்து விட்டதாகச் சொல்லவே போகிறார்கள். இதிலிருந்து இவர்கள் செய்கை எவ்வளவு கேவலமானதாக இருக்கிறது என்பதை வாசகர்கள் சிந்திப்பார்களாக.

தோழர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் செட்டிப்பிள்ளை ஆனதால் இந்த முட்டாள் தனத்துக்கும் மானக்கேட்டுக்கும் தாம் ஆளாகக்கூடாது என்று கருதி வெகு ஜாக்கிரதையாக ஒரு ஏமாந்த சோணகிரிதலைமையில் பொறுப்பைக் கட்டி பிறந்த அன்றே கொன்று விட்டு இந்தக் கண்றாவியைப் பாக்கவும் கேட்கவும் கூடாதென்று மெள்ள மாகாணத்தை விட்டே நழுவி விட்டார். இதை அறியாத தோழர் ராஜன் அவர்கள் அன்று கட்டி அன்றே அறுபட்டாலும் கொஞ்சநேரமாவது கட்டுக்கழுத்தியாய் (தலைவராய்) இருந்தால் போதுமென்று கழுத்தைக் கொடுத்து மாட்டிக் கொண்டு மூலையில் உட்காரவேண்டிய நிலைக்கு வர வாய்ப்பு பெற்றுவிட்டார்.

தோல்வி நிச்சயம் என்று தெரிந்திருந்தும், எதிர் கட்சியாகிய காங்கரசைக் குறை சொல்லி எதிர்த்து நின்று ஓட்டர்களைத் திருப்திப் படுத்தி தங்களுக்கு ஓட்டுச் செய்யும்படி செய்ய எவ்வித காரணமும் தங்களிடம் இல்லை என்பதும் தெரிந்து இருந்தும், பாமர ஓட்டர் மக்களிடம் தாங்கள் இதுவரை சரியான அறிமுகமோ, நாணயமான நல்ல பேரோ வாங்காமல் நாணயமும், யோக்கியப் பொறுப்பும் அற்ற எந்தக் காரியத்திற்கும் சிலர் முதல் தாம் பூலம் வாங்கிக்கொண்டும் இருந்து விட்டு நாணயக் குறைவான முறையில் ஒரு கட்சியை வைத்து கொண்டு, போலித்தனமாக ஒரு "கட்சி"யை ஏற்படுத்திக் கொண்டு காங்கரஸ்காரருடன் போட்டி போட முன்வந்தால் அதன் கருத்தில் அறிவுடைமையோ, நாணயமோ இருக்க முடியுமா என்று கேட்கிறோம்.

காங்கரஸ்காரர்கள் பாமர மக்களை எப்படி எப்படியோ வசப்படுத்தி வைத்திருப்பதையே அவர்களது முக்கிய திட்டமாக வைத்து சுமார் 25 வருஷ காலமாக வேலை செய்து வந்திருக்கிறார்கள், வருகிறார்கள். போலிக் கட்சியார் தங்கள் கட்சியைப் போலவே தாங்களும் மக்களால் போலிகள் என்று சொல்லும்படியான பெயர் வாங்குவதில் சிறிதும் வெட்கமோ, சங்கடமோ

# கறுப்பு சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கறுப்பு சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள். பெண்களும் சேரலாம். ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

---

படாமல் அவ்வப்போதைய அவரவர்கள் தனித்தனி காரியத்தில் கவலையுள்ள சமயசஞ்சீவிகளாய் நடந்து வந்து இருக்கிறார்கள்.

தோழர் பாலசுப்ரமணிய முதலியார்தானாகட்டும் "கட்சித்தலைவர்" தோழர் ராஜன் முதல் கட்சித் தொண்டர் தோழர் சைமன் ராமசாமி கோஷ்டியார் வரை எலக்ஷனுக்கு பிரசாரம் செய்த "கட்சி" பக்தர்கள்வரை நாட்டுக்கு என்ன செய்தோம் என்றுசொல்ல முடிந்ததா? அல்லது நாட்டு நலனுக்கு, மக்கள் நலனுக்கு ஏதாவது தியாகம் செய்திருப்பதாகச் சொல்ல முடிந்ததா என்றும் கேட்கிறோம். ஏன் இதை சொல்லுகிறோம் என்றால் ஓட்டர்கள் விஷயம் தெரிந்தோ தெரியாமலோ இதைத்தானே கேட்கிறார்கள்? இதைக் கேட்பவரிடம் தானே இவர்களும் ஓட்டு கேட்டு ஆக வேண்டும்? அப்படி இருக்க அந்தப் பக்கம் ("தியாகத்தின்"பக்கம்) திரும்பிப் பார்க்காமல் யுத்த சேவையிலும் கொள்ளை லாபத்தையே எதிர்பார்த்து ஏராளமான பதவியும் பணமும் அடைந்துவிட்டு இதற்கு எதிரிடையான வெந்து புழுங்கிக்கொண்டிருக்கும் மக்களிடம் சென்று ஓட்டுக் கேட்கப் புறப்பட்டது புத்திசாலித்தனமான காரியம் என்று இவர்களை எலக்ஷனுக்கு நிற்கச் சொன்ன ஹோப் துரை மகனாராவது சொல்லுவாரா என்று கேட்கிறோம்.

இந்தலட்சணத்தில் தேர்தலுக்கு நின்றவருக்கு ஒன்றும் கைநட்டமில்லை என்றாலும் லாபமும் "அகில இந்திய" விளம்பரமும் "பார்லிமெண்டில் பிரஸ்தாபமும்" கிடைத்திருக்கலாம் என்றாலும் பொது மக்கள் பணம், பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஏற்பட்ட மானக்கேடு, வெட்கப்படத்தக்க இழிபேச்சு ஆகியவைகள் ஏற்பட்டு விட்டதா இல்லையா என்று யோசிக்க வேண்டுகிறோம்.

தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் தனது வாயாலேயே "பார்ப்பனரல்லாதாருக்கு, அவர்களில் தகுதி இல்லாதவர்களுக்கு நலன் செய்தும் அவர்கள், நன்றி கெட்டவர்களாக ஆகிவிட்டதால் இனி பார்ப்பனரல்லாதாருக்கு என்று, அவன் பார்ப்பனரல்லாதான் என்பதற்குஆக எந்தவித உதவியும் செய்யமாட்டேன். எப்படிப்பட்ட தொண்டும் ஆற்றமாட்டேன்" என்பதுஆகப் பேசிவிட்டார். இது அவர் சொன்னதாக மாத்திரம் கருதுவதற்கில்லாமல் அவருக்கு வேலை செய்த தோழர்கள் கோதண்டராம முதலியார், தாமோதரம் நாயுடு, மதனகோபால் நாயுடு, தாதுலிங்க முதலியார், சுந்தரராவ் நாயுடு, சுப்பிரமணிய செட்டியார், கோபதியார், சர் ராஜன், சிவராஜ், கண்ணப்பர், தண்டபாணி,சைமன் வரை சொன்னதாகத்தானே அருத்தம். இல்லாவிட்டால் இவர்களில் யாராவது மறுத்திருக்கலாமே. ஆகவே ஒரு தேர்தல், அதிலும் மகாமகா பொருத்தமான பாலசுப்ரமணிய முதலியார், —பார்ப்பனரல்லாதாருக்காக தகுதி இல்லாதவர்களுக்கும் இலவசமாய் பெருந் தொண்டாற்றிய பொதுநல தியாகி பாலசுப்பரமணிய முதலியார் நின்ற இந்த தேர்தலில் தோல்வியேற்பட்டவுடன் "கட்சி"யையே கலைத்துவிட வேண்டும் என்றும் இனி நன்றியற்ற ஓட்டர்களாகிய பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே பார்ப்பனரல்லாதார் என்பதற்கு ஆக எவ்வித சலுகையும் உதவியும் செய்யக்கூடாதென்றும் முடிவு செய்து கடையைக் கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது என்றால் நாளைக்கு இன்னும் சில தொகுதிக்கும் நிற்கவேண்டும் என்று கருதி நிற்கப் போகிற ஆட்கள் நின்று இந்தக் கதி அடைந்தால் அதற்கு அப்புறம் பார்ப்பனரல்லாத சமுதாயம் அவ்வளவும் இந்த தமிழ்நாட்டை விட்டு அடியோடு வெளியேறி விடவேண்டியது (குயிட் தமிழ்நாடு) என்பதாகத்தானே சொல்லப்பட வேண்டியதாகிவிடுமல்லவா என்று கேட்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சித்தலைவர் பெரியார், ஈ. வெ. ரா. "தேர்தலுக்கு நம் திராவிடர்கட்சி நிற்பது தகுதி அல்ல. அதை பகிஷ்கரிக்க வேண்டும்" என்று சொன்ன காலத்தில் இந்த பிரகஸ்பதிகள் தேர்தலுக்கு நிற்பது வெற்றி பெறுவதற்கே அல்ல என்றும் மக்களுக்கு பிரசாரம்செய்ய ஒரு சந்தர்ப்பம் என்றும் சொன்ன மேதாவிகள் இந்த தேர்தலில் அந்தப்படி என்ன பிரசாரம் செய்தார்கள் என்று கேட்கிறோம். வெள்ளையன் வெளியேறவேண்டும் என்று பிரசாரம் செய்யவும், இந்திய தேசியராணுவத்தினரை விசாரிக்கக்கூடாதென்று பிரசாரம்செய்யவும் காங்கரசுகாரர்கள் இருக்கும்போது "அதற்கு ஆக" எவ்வளவோ நாசவேலை

செய்து அடி, உதை, சிறைவாசம் ஆகியவை அனுபவித்துவிட்டு வந்து அதை சொல்லும்போது இந்த "ஜஸ்டிஸ்" தியாகமூர்த்திகள் ஊராரிடம் பணம் வசூலித்து பாழாக்கிக் கொண்டு, மானங்கெடும்படியான தோல்வி காத்திருக்கிறது நம்மைக் கட்டியணைய என்று தெரிந்திருந்தும் ஏன் அந்தப் பிரசாரம் ஏன் அந்தப் பிரச்சினைமீதே நிற்க வேண்டும், பிரசாரம் செய்யவேண்டும் என்று கேட்கிறோம்.

தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் "இனிமேல் நான் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற வித்தியாசம் பார்க்க மாட்டேன்", "தகுதியை பார்ப்பேன்" என்று தகுதி அளவுகோல் பார்ப்பனரிடம் இருந்து இன்றுதான் புதிதாக வாங்கினவர் போல் காட்டிக்கொள்ளுகிறார். இதில் நாணயமோ உண்மையோ இருக்க முடியுமா என்று கேட்கிறோம்.

இவர் பொதுவாழ்வுக்கு வந்த காலம்முதலே இந்த பேதம், அதாவது பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேதம் காரியத்தில் காட்டினதில்லை என்பதற்குப்பல ஆதாரங்கள் சொல்லலாம்.

தோழர் சர் எஸ்.வி. ராமமூர்த்தி என்கின்ற பார்ப்பனர் சீப்செக்ரட்டரி ஆக ஆக்கப்பட்டவுடன் பெரியார் பார்ப்பனர் இந்தப் பதவிக்கு இதுசமயம் வரக்கூடாது என்று கவர்னரை நெருக்கும் போது இதே தோழர் பாலசுப்பிரமணிய முதலியார், "தோழர் இராமமூர்த்தி அவர்கள் அந்த வேலைக்கு மிகவும் தகுதி உள்ளவர், அவர் மீது எவ்விதத் தவறும் சொல்ல முடியாது. அவர் பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதவர் என்ற பேதம் காட்டக்கூடியவரல்ல. இதுவரையும் காட்டினவருமல்ல" என்று எழுதினார். (இதுதான் பெரியார், இவரை வெறுப்பதற்கும், உதவி நிறுத்தினதற்கும் முதல் காரணம்)

மற்றும் இவரை இந்தி கேசில் விடுதலை செய்த மாகாண மாஜிஸ்திரேட் ஆன ஒரு பாப்பனரை வானமளாவப் புகழ்ந்தார், மற்றும் இவரை மான நஷ்ட கேசில் விடுதலை செய்த ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ் பார்ப்பனரை வானமளாவப் புகழ்ந்து "மறுபடியும் அவருக்கு அந்தவேலை கொடுக்க வேண்டும் அவர் மிகத் தகுதிவாய்ந்தவர்" என்று எழுதினார்.

இவருக்கு ஒரு 100 ரூபாய்க்கு செக்குக்கொடுத்ததால் சர் R. S. சர்மா என்கின்ற ஒரு பார்ப்பனரைப்புகழ்ந்து படம்போட்டு செய்கையும் பிளாக் போட்டு மற்ற பார்ப்பனர் தயவையும் சம்பாதிக்கப் பயன்படுத்தினார். இவர் காட்டியபேதத்திற்கு இப்போது இவை போதும். ஆகவே இவைகளிலிருந்து இவர் பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதவர் என்கின்ற பேதம் காட்டியதாக சொல்லமுடியுமா என்று கேட்கிறோம்.

மற்றும் பார்ப்பனர் அல்லாதார் என்பதற்குஆக யாரையாவது சலுகை காட்டி "சும்மா விட்டாரா" என்று கேட்கிறோம். இன்று இவர் வாயாலேயே புகழ்ந்து கூறி பாராட்டிக்கொண்டிருக்கும் சர் ஷண்முகம் செட்டியாரை அவர் இவருக்கு நண்பராகும்வரை வெளுவெளு என்று வெளுத்துக் கட்டி வந்தார். இவரை சிநேகிதராக்கிக்கொள்ளாத சர் ராமசாமி முதலியாரை அவர் குடும்பத்தினரை இனிமேல் வைவதற்கு அகராதியில் வார்த்தை இல்லை, என்ற அளவுக்கு அவரை வைவதை, இழித்துக்கூறுவதை முறை ஜபமாகக்கொண்டு வைது, அவரது (சர். ஏ. ரா. வின்து) எதிரிகளைத் திருப்தி செய்து வந்தார். இவருக்கு பத்திரிகை நடத்த வசதி அளித்து அதற்கு ஆபத்து வந்தபோது நல்ல உதவி செய்து வந்த பெரியார் ராமசாமியை இவ்வளவு அவ்வளவு என்பதற்கு இல்லாமல் வைவதும் அவரோடு "போட்டிபோடும்" தலைவர்களுக்கு செல்லப்பிள்ளை, குடும்ப நண்பர் ஆகும் அளவுக்கு ஆபாச இழிவுப் பிரசாரம் செய்வதுமாகவே தேர்தல்வரை இருந்து வந்தார். இவரை பெரிய மனிதருக்கு அறிமுகப்படுத்தி அவர்களிடம் செல்லச் செய்த பொப்பிலி ராஜாவை கட்சி துரோகி டிரெய்டர் என்றும் 50 ஆயிரம் மக்கள் முன் பறை அடித்தார். மற்றும் இவர்களைப் பற்றியே இப்படி நடந்து கொண்டார் என்றால் இனி கேட்கும் போதெல்லாம் பணம் அள்ளிக்கொடுத்து பழக்கிவிட்ட தோழர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், குமாரராஜா முதலியவர்கள் விஷயத்தில் எப்படி நடந்து வந்தார் என்பதும், அவர்களை எவ்வளவு குறை கூறிவந்தார் என்பதும் தோழர் கொண்டப்பா முதலியவர்கள் விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார் என்பதும் யாவரும் அறியாததல்ல.

இந்தப்படி இவர் ஏற்கனவே அதாவது பொது வாழ்வு ஆரம்பத்தில் இருந்தே பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேதமோ, சலுகையோ இல்லாமல் "சமுதாயத்தில் பெண்கள் கற்பு விஷயத்தில்" தோழர் லக்ஷ்மிகாந்தம் அவர்கள் நடந்து வந்தது போலவே அரசியல் "பொது வாழ்வு நாணய விஷயத்தில், உத்தியோகப் பதவி விஷயத்தில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பேதம் சலுகை "இல்லாமலே நடந்து வந்திருக்கிறார்" ஆதலால் இனி இவர் புதிதாக நடந்துகொள்ளவேண்டிய கொள்கை ஒன்றும் பாக்கி இல்லை என்று சொல்ல இவற்றை எடுத்துக்காட்டுகிறோம்.

இனி கட்சியைக் கலைத்து விடுவது என்பதிலும் பேசப்போனால் இவருக்கு கட்சி எங்கே இருக்கிறது? எத்தனை பேர் மெம்பர்? ரிஜிஸ்டர் புத்தகம் எங்கே இருக்கிறது? எந்த முறையின்படி அமைக்கப்பட்டது? என்று கேட்கிறோம். இன்று அவர்கள் குறிப்பிடும் கட்சி என்பதெல்லாம் சுபகாரியத்திற்குச் செல்லும் ஒரு கூட்டத்தாரைப் பார்த்து (சகுனத்தில் நம்பிக்கை உள்ள ஒருவன்) தனக்கு மூக்குப்போனாலும் சரி அவர்களுக்கு சகுனத் தடை ஏற்பட்டால் போதும் என்று தனது மூக்கை அறுத்துக்கொண்டு கூட்டத்திற்கு முன் வந்து நின்று சகுனத் தடை உண்டாக்கியது" போல் அல்லாமல் உண்மையில் கட்சி எங்கே? கொள்கை எங்கே? அவைகள் தேர்தலில் சொல்லப்பட்டனவா? பிரசாரம் எங்கே? (சென்னை கிளப்புகள் தவிர? பந்தோபஸ்தான கட்டடங்கள் தவிர?) என்று சொல்லமுடியுமா?

"பார்ப்பனரல்லாதார் ஓட்டுப் போடவில்லை,கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஆகிய இரு

கூட்டம்தான் ஓட்டுப்போட்டார்கள்" என்று சொல்லுகிறார்.

ஆங்கிலோ இந்தியர்கள் நட்பு இருப்பதே இந்தக்காலத்தில் ஒரு குறைபாடு என்பதை உணராதவர்கள் கதி, என்றும் இப்படித்தான் ஆகும் என்பது நமது அபிப்பிராயம். ஆங்கிலோ இந்தியர் நட்பு நமது கெஞ்சுதலின்மீது இருந்தால் அது மேலும் நமக்கு யோக்கியதைக்குறைவு என்போம். அவர்கள் நட்பு, நம்மிடம் அவர்களுக்கு உள்ள பயத்தின்மீது இருந்தால்மாத்திரமே அதில் சிறிது நலமிருக்கலாம். நம் கவர்னர் பெருமான் நட்பு நம்மிடமுள்ள பயத்தினால் இருந்தவரை நமக்கு சிறிதாவது பயன்பட்டது. இப்போது அவர் தயவு நமக்குத் தப்பான வழியிலும் பல்லைக்காட்டுவதன் மூலமும் இருந்துவருவதால் தாராளமாய்க் கேடு நடந்துவருகிறது. நாம் நம் கவர்னருக்கு வெளிப்படையான விரோதியாய் இருந்திருப்போமானால் பல நன்மைகள் நம் எதிரிகள் அடைந்ததைவிட அதிகமாய் அடைந்திருக்கலாம். அதுபோல், ஆங்கிலோ இந்தியர்கள் தயவு நமக்கு இருந்தது நம்மை தகுதிக்குறைவாக ஆக்கிவிட்டது. பெருவாரி கிறிஸ்தவத் தோழர்களும் எந்த அளவில் நம்முடன் ஒத்துழைப்பவர்கள்? திராவிடநாடு ஒப்புக் கொண்டார்களா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒப்புக்கொண்டார்களா? அல்லது இவ்விரு கூட்டமும் "வெள்ளையனே வெளியே போ" ஒப்புக்கொண்டார்களா இவைகளை ஒப்புக்கொள்ளவில்லையானால் இவர்கள் ஓட்டுகள் போலி ஓட்டுகள் என்று தானே சொல்லவேண்டும். அல்லது இவர்கள் தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் சொன்ன "குயிட் இண்டியா" என்பதை "பித்தலாட்டம் சமயத்திறகுத்தக்கபடி (சேலம் மாநாட்டில் சொன்னது போல்) சொல்லப்படுவது" என்று கருதி ஓட்டு செய்திருக்க வேண்டும்.

பார்ப்பனரல்லாதார் ஓட்டுச் செய்யவில்லை என்கிறார். அவர்கள் 5, 6, ஆயிரம்பேர்கள் ஓட்டுச் செய்திருக்கிறார்கள்; ஆனால் காங்கரசுக்குச் செய்தார்கள் இவருக்குச் செய்யவில்லை. யாருக்கும் ஓட்டுச்செய்யாத பார்ப்பனரல்லாதார்களும் 5000, 6000பேர் இருக்கலாம். ஆனால் அவர்கள் போலி ஜஸ்டிஸ்கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல; உண்மையான ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஜஸ்டிஸ்கட்சி திட்டப்படி ஓட்டுச் செய்யாமல் விலகி இருந்துகொண்டார்கள். அவர்கள் ஓட்டு செய்திருந்தாலும் தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் இந்த கதிதான் அடைந்திருக்க முடியும். ஆதலால் தோழர் முதலியார் பார்ப்பனரல்லாதாரை வைவது வாய்வலியாகத்தான் முடியுமே தவிர மதிக்கத்தகுந்ததாக அவசியமிருப்பதாக ஆகாது என்று சொல்லுவோம்.

ஆகவே தேர்தல் சங்கதி ஒரு அளவு முடிந்துவிட்டதுடன் அது நாம் சொன்னபடி, நிற்கக்கூடாது என்ற நம் கட்சித்திட்டம் சரி என்று கருதும்படி நடந்தேறிவிட்டது.

இனி மார்ச்சுமாதத்தில் வரும் தேர்தலிலாவது இந்த கோஷ்டிக்கு நல்ல புத்தி வரவேண்டும் என்று ஆசைப்படுவதால் நம் கட்சிக் கொள்கைக்கு விரோதமாய் தேர்தலில் வேலை செய்தவர்கள்மீது ஆங்காங்கு உள்ள நம் கட்சியார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நம் எதிரிகள் இத்தேர்தலில் ஏகபோக வெற்றி பெற்றுவிடுவதால் நம்மவர்கள் எவரும் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை என்றும், இந்த வெற்றி சந்தி சிரிப்பதை நாம் பார்க்க இருக்கிறோம் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## பெரியார் ஈ. வெ. ரா.

ஓய்வுக்காக குற்றாலம் சென்றிருந்த பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 3ந்தேதி குற்றாலத்தை விட்டுப் புறப்பட்டு அன்றிரவு மதுரைக்கு வந்து 4ந்தேதி மதுரையில் பொதுக்கூட்டத்தில் பேசி விட்டு அன்றிரவே திருச்சி வந்து திருச்சியில் 5ந்தேதி காலை மருத்துவர் சங்க ஆண்டுவிழாவிலும் திருமணத்திலும் கலந்து கொண்டு அன்றிரவே புறப்பட்டு 6ந்தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்தார். மீண்டும் 8ந்தேதி இரவு புறப்பட்டு 9ந்தேதி திருவத்திபுரம் மகாநாட்டிற்கும் 10ந் தேதி முதல் 13ந் தேதி முடிய வட ஆற்காடு ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு 14ந் தேதி காலை சென்னை போய்ச் சேர்வார். அங்கு 15ந்தேதி நடைபெறும் மாநாட்டிலும் அன்றிரவு நடைபெறும் நாடகத்திலும் 16ந் தேதி கமிட்டிக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு 18ந் தேதி வாக்கில் ஈரோடு வந்து சேர்வார்.

## திருச்சி கௌன்சிலைப் பின்பற்றுக!

திருச்சி முனிசிபல் கௌன்சிலில் 29-11-45-ந் தேதி கூட்டத்தில் கௌன்சிலர் தோழர் என். சங்கரன் பிள்ளை அவர்களால் கொண்டுவரப்பட்ட "கிருஷ்ணன்—பாகவதரைக் கருணை காட்டி விடுதலை செய்க" என்ற சென்னை கவர்னர் அவர்களைக் கேட்டுக் கொண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி தீர்மானம் சோளவந்தான் யூனியன் பஞ்சாயத்து போர்டில் 29-11-45-ல் நடந்த கூட்டத்தில் போர்டு மெம்பர் தோழர் ஆவடையப்பரால் கொண்டு வரப்பட்டு தோழர் ஆ. குமாரசாமி பத்தரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வாணியம்பாடியில் 30-11-45 முனிசிபல் கௌன்சில் கூட்டத்தில் மேஷ்டி தீர்மானம் தோழர் சி. கோவிந்தராசனால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி முனிசிபல் கௌன்சிலுக்கு மேற்படி தீர்மானம் தோழர் பி. வி. பொன்னுசாமி நாடார் அவர்களால் அனுப்பப்பட்டிருப்பதாக தோழர் கே. வி. கே. சாமி அறிவிக்கிறார்.

## சென்னை ஜில்லா திராவிடர் பெடரேஷன்

10-12-45 திங்கள் மாலை 6-மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டை சிவஞானம் பார்க்கில் ஒரு மாபெருங் கூட்டம் நடைபெறும். தோழர் எம். ஆர். பாண்டியன் தலைமை வகிப்பார்.

தோழர்கள் தே. அன்பழகன், எஸ். ராஜேந்திரன், என். வி. நடராசன், சத்தியவாணி முத்து மற்றும் பலர் "தேர்தலுக்குப் பின்" என்பதுபற்றி பேசுவர். மாணவர்களும் பொதுமக்களும் திரளாக வருக!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் அவர்களை வரவேற்று டாக்டர் பிச்சமுத்து பேசுகையில் பெரியார் மருத்துவர் சமூகத்திற்குச் செய்த சேவைகளைக் குறித்தும், மருத்துவர் சங்கம் என்றும் திராவிடர் இயக்கத்திற்கும், பெரியாருக்கும் நன்றி செலுத்தி அவர்களைப் பின்பற்றி நடக்குமென்றும், பெரியார் இதற்கு முன் இரண்டு தடவை மருத்துவர் சங்க ஆண்டு விழாவில் கலந்திருக்கிறார் என்றும் கூறி கறுப்பு மாலை போட்டு திராவிடர் கழகத்திற்கு நன்கொடையாக பிச்சமுத்து 10. ரூபாயளித்தார்.

பின் பெரியார் பலத்த கைதட்டலுக்கிடையே தலைமை வகித்தார். தோழர் ஷண்முகம் முதலியவர்கள் பாடினார்கள். பின் காரியதரிசி ஆண்டு அறிக்கைபடித்தார் ஈரோடு தோழர் ஆர் ரங்கசாமி காலஞ்சென்ற தோழர் மு. கந்தசாமி பண்டிதர் படத்தைத் திறந்து வைத்து அவருடைய சேவையைப் பாராட்டினார். பின் தோழர் ம. ராஜகோபால் அவர்கள் காலஞ்சென்ற பெரியண்ணா வைத்தியர் படத்தைத் திறந்து வைத்து அவர் மருத்துவருக்கும், வைத்தியத்திற்கும் செய்த சேவையைப் பாராட்டிப் பேசினார்

பின் தோழர்கள் ஷண்முகம், டாக்டர் பிச்சமுத்து, பக்தாதி, டாக்டர் மீரான் முதலியவர்கள் மருத்துவர் சமூகத்தைப் பற்றியும் மருத்துவர்கள் முன்னேற்றம் பற்றியும் பேசினார்கள்.

பின் பெரியார் அவர்கள் நீண்ட கைதட்டலுக்கிடையில் அழுத்தமாக முடிவுரையாகப் பேசும்போது மருத்துவர்கள் முன்னைய நிலையைப் பற்றியும், இன்றைய நிலையைப் பற்றியும், அவர்கள் இப்போது செய்யவேண்டிய வேலைகளைப் பற்றியும், ஆரியவில் பிரதிநிதித்துவம் கேட்கவேண்டியதைப் பற்றியும் சுமார் 1 மணி நேரம் பேசினார்.

(அது பின்னர் வரும்)

பின் நன்றி கூறலுடன் கூட்டம் கலைந்தது.

## தென்னார்க்காடு மாவட்ட கறுப்பு சட்டை தொண்டர் படை முதல் மாநாடு

ஜனவரி மாதத்தில் சிதம்பரம் தாலுக்கா மேல் புவனகிரியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மாநாட்டு ஏற்பாடுகளைத் தோழர்கள் கே. நமசிவாயம், சி. முனுசாமி ஆகியோர் கவனித்து வருகிறார்கள்.

மாநாட்டில் நமது மாவட்டத் தொண்டர்கள் குறைந்தது 500 பேர்களாவது கலந்துகொள்ளவேண்டும். எனவே தோழர்கள் அனைவரும் உடனே தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு உடை தயாரித்துக்கொள்ள வேண்டுகிறேன். விழிமின், எழுமின், விரைமின் தோழர்களே!

ஆ. திராவிடமணி, கூடலூர் O. T.

o o

## மாணவர் மாகாண மாநாடு

திராவிட மாணவர் மாகாண மாநாடு தென் ஆர்க்காடு மாவட்ட கறுப்புசட்டைப் படை முதல் மாநாட்டின் அடுத்த நாள் நடைபெறும்.

---

பம்பாய் திராவிட நாடு பகுத்தறிவு நிலையத்தின் மாதாந்திரக் கூட்டம் 4-11-45-ல் நடைபெற்றது.


போரில் வெற்றி!
எனவே
சமாதான கால தேவைகளிலும்
வெற்றி வேண்டும்.
ஆகையால்

# குரு மருந்துகள்

இனி உங்கள் தேவைக்குக் கிடைக்கலாம்.

முக்கிய தயாரிப்புகள்.


| | ரூ. அ. பை. |
|---|---|
| குரு தைலம் (210 வியாதிகளுக்கு) | 1—8—0 |
| குரு பல்பொடி (தந்தரோகங்களுக்கும்) | 0—5—0 |
| குரு களிம்பு (புந்து, படைகளுக்கு) | 0—14—0 |
| குரு ஆயுள்வேத லேகியம் | 2—0—0 |
| குரு ஆஸ்த்மா டிராப்ஸ் (இருமல் காசங்களுக்கு) | 2—0—0 |
| குரு தாதுவிருத்தி மருந்து (வாலிப-வயோதிகர்களுக்கும்) | 5—0—0 |
| குரு சந்தான சொர்ணம் (ஸ்திரிகள் சகல கர்ப்ப நோய்களுக்கும்) | 5—0—0 |
| குரு குழந்தை செட் (CHILDREN SET) (குழந்தைநோய்-பாதுகாப்புக்கும்) | 8—10—0 |

குரு மருந்துகள் குடும்ப பொக்கிஷம்

உங்கள் ஊர் மருந்து—ஷாப்கடைகளில் கேளுங்கள். இல்லாவிடில்

டாக்டர்
எ. மதுரம் சன்ஸ்,
குரு மருந்து சாலை..........
திருச்சிராப்பள்ளி (S. I.)





ஜெயராம்
## காயசுத்தி லேகியம்

வாத்தி மயக்கத்திற்கு காயசுத்தி லேகியம்
பித்தவாய அஜீரணத்திற்கு காயசுத்தி லேகியம்
குன்மம் குடல் வாதத்திற்கு காயசுத்தி லேகியம்
மூலம் மலச்சிக்கலுக்கு காயசுத்தி லேகியம்
ஒரு தடவை உபயோகிக்கள் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0.
V. P. P. வேறு

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.


ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பையா ராம வீரப்பன் எஸ் சாமிக்கண்ணு எம் எஸ் ரத்தினம் த முருகையா க ரெத்தினம் சொக்கலிங்கம் க அண்ணாமலை பெ நடராசன் பி அ அமுர்த நாடார் கா பொன்னப்பன் அ மலையன் அருணாசலம்.

கொளும்பு: (கிரிமிட்டி தோட்டம்)

கே பழனி கே ஜி எஸ் காளியம்மா கே பி மாணிக்கவாசகம் கே பி கருப்பையா கே பி ஆண்டி கே பி குணசீலன் கே பி பாக்கியம் கே பி சங்கரம்மாள் கே பி செலம்பாய் கே பி காளியம்மாள் சிட்டு எம் பூரணம் எம் கோகிலம் எம் வசந்தம் பி கே சுப்பன் கே ஜி பேச்சி கே எஸ் சத்தியசீலன் கே எஸ் கருப்பையா கே எஸ் மாரியாய் கே எஸ் லெட்சுமி கே எஸ் தங்கம்மாள் கே கூடலிங்கம் கே மகேந்திரன் கே தங்கவேல் டாக்டர் கே பி வேம்பையா கே பி கருப்பையா கே பி கதிர்வேலு கே பி மலையப்பன் எம் மாரி எம் வெள்ளசாமி எம் எம் முத்தையா எம் எம் பெருமாள் எம் வி பழனி என் பி சின்னையா கே லிங்கப்பன் தவமணி ஐ சிவனு கே வள்ளியம்மாள் கே மணி எம் பார்வதி கே செல்லம்மா பி கண்ணம்மாள் எஸ் செல்லய்யா கே எஸ் அளகய்யா நாட்சி கே எஸ் ஏ செல்வராஜ் எஸ் தவமணி கே எஸ் ஏ காளியம்மாள் கே எஸ் பொன்னையா கே எஸ் வேலு மாரிமுத்து கே ஜி எம் கதிர்வெலு எம் அடைக்கன் எம் சண்முகம் ஏ எஸ் சின்னையா பூச்சி ஜெகதம்பா கே சாந்தாமணி கே மாயாண்டி.

நாகூர்:

ரா குருசாமி செல்லம்மாள் குருசாமி ஜே ரெங்காஜலு ரா கோவிந்தராசு வை சபாபதி ஆர் எஸ் காசிநாதன் வி கோவிந்தராசலு எஸ் தங்கவேலு ப நா முனுசாமி எஸ் காளியப்பன் பி ரெத்தினசாமி கோ குப்புசாமி.

திருப்பாபுலியூர்:

வ இராசன் தமிழரசன் கணேசன் வெ செகநாதன் சி குப்புசாமி வ ஆதிநாராயணன் ஜே சந்தானம் எஸ் சுதர்சனம் இரா தேவராசன் து அன்பழகன் ச சுதர்சனம் இரா ராமய்யா கோ முரசழகன் வே ஆனந்தன் வி கோவிந்தராசன் கோ பாண்டியன் சே தீரமணி வி பங்காருசாமி ஜே கண்ணுசாமி சுப்பிரமணியன் ஐ மகாலிங்கம் பண்டரிநாதன் எஸ் ராஜேந்திரபால் ஜி சாமிநாதன் சி எம் தாமோதரன் வி சரவணன் சாவித்திரி வேணுகோபால் நாயுடு வே சேதுராமன் ச குமாரசாமி பி ராஜாங்கம்.

கூடலூர்: (முன் தொடர்ச்சி)

வி சண்முகம் நா பார்த்தசாரதி ப பாலன் பி துலசிசாமி ப பூமிலிங்கம் வி குருசாமி.

பொத்தனூர்,

க சிவப்பிரகாசம் சொ அ மணிவாசகம் ஒ எம் சுப்ரமணியன் கே சண்முகம் சோமசுந்திரம் இரா சண்முகம் மலை செகந்நாதன் கு பெருமாள் கு ஆறுமுகம் சு முத்துசாமி இரா கருப்பன் நலங்கிள்ளி சோலாதன் யோகநாதன் ஆர் அருணாசலம் எம் இருளாண்டி ஆர் கதிர்வேல் பி எம் முத்துசாமி வி பி அப்பாவு வீ மருதன் மலை லக்குமணன் மலை மதியழகன் க அ முத்தையன் மு வேலாயுதம் என் வி சண்முகம் கு ஆறுமுகம்.

வேலூர்:

அ வெங்கடாசலம் கே ஆர் சுப்ரமணியம் மு முருகேசன் சு பழனிசாமி ப மாரப்பன் வி என் ஆறுமுகம் டி ஏ முத்துசாமி கண்டியண்ணன் பொன்னன்.

பாமத்தி:

டி ஆர் கிருஷ்ணமூர்த்தி கே இராசாராம் கோபால்சாமி டி பொன்னன்.

நன்செய் இடையாறு:

ஒய் சதாசிவம் வே சாமிநாதன் நாகராஜன்.

பாலப்பட்டி:

காங்கேயன் முத்தையன் ப மூத்துசாமி தாமோதரன்.

பாண்டமங்கலம்:

ஆர் பாலகுருசாமி பு கோபால் எஸ் கந்தசாமி.

பூந்தோட்டம்: (சிதம்பரம் தாலுக்கா)

ஆர் தில்லை கோவிந்தசாமி சாரதாம்பாள் பி கோவிந்தசாமி கோ ருக்மணி சி ஞானசம்மந்தம் ஏ வரதராசன் பி எஸ் வேணுகோபாலன் த சகாதேவன் மு தங்கவேல் பி ஆர் சுப்ரமணியம் எஸ் காமாட்சி எஸ் தனலட்சுமி பி ரத்தின்சாமி கி குருசாமி ஏ காசிநாதன் கா குப்பம்மாள் சாமிக்கண்ணு எம் சடகோபன் பி சிங்காரவேலு தம்புசாமி பி சிவப்பிரகாசம் எம் மகாதேவன் கு லெட்சுமணன் சாமிநாதன் எம் தங்கராஜ் ஏ சோமசுந்தரம் கி தில்லைக்கோவிந்தசாமி வைத்தினாதசாமி கிருஷ்ணசாமி பி ஆர் வேணுகோபால் எஸ் தனலட்சுமி எஸ் சீதாலட்சுமி சாதையனாயகி சோ ஞானசுந்தரி பத்மாவதி டி சேது ராசலிங்கம் கே கோபால கிருஷ்ணன் ஏ பத்மநாபன் த சொக்கலிங்கம் ஏ நாராயணசாமி சங்கரன் ஆர் கோபாலசாமி.

அழிசிகுடி கிராமம்:

டி முருகேசன் ரா கிருட்டினசாமி ராசகோபால்.

தாரமங்கலம்:

டி எஸ் சுப்பிரமணியம் மாரியப்பன் கே. பி. குப்புசாமி சுப்பிரமணி கைலாச முதலி ஆ ரா மாரிமுத்து டி எம் தர்மலிங்கம் பெ கு சிவசங்கரன் பொன்னுசாமி பெ கு செங்கோட்டு முதலி டி பி முருகேசன்.

மதுரை: (முன் தொடர்ச்சி)

எம் எஸ் ஜெகநாதன் எம் கே பாண்டியன் எம் ஆர் சோமு வி நடராசன் எஸ் பி ராமசாமி பி ரத்தினம் பி பொன்னையா பெ பொன்னம்மாள் மெய்யம்மாள் சீரங்கம்மாள் முத்துலட்சுமி முத்திருளாயி அம்மாள் அங்கு அம்மாள் பிச்சை அம்மாள் ராஜம் அம்மாள் எஸ் அருணாசலம் கே பிச்சை கருப்பாயி அம்மாள் தீர்த்த கரையம்மாள் வி எம் நாகரெத்தினம் பி கே எஸ் மணி எம் ஆர் முத்தையா பி எஸ் கருப்பையா.

பெரியகுளம்:

எஸ் ரெங்கசாமி வே துரைராஜ் பெரியவீராசாமி நாயுடு எஸ் திருவேங்கடகோனார் மா செல்லப்பெருமாள் வி கருப்பையா ந திருமலைசாமி அ சுப்பையா டி கே ராசுவப்பணிக்கன் கு ஈஸ்வரமூர்த்தி அ சு பாண்டியன் பெ பழனி கோ கோபாலன் சி குருசாமி சி வீரபத்திர பிள்ளை பி முத்துப்பெருமாள் கே அய்யாத்துரை இ ராஜமுத்து ப கு ராமசாமி.

துறையூர்:

து வீ நாராயணன் சி தங்கையன் து க கணேசன் மூ பிச்சைமுத்து ஆ கருப்பையா எம் சின்னதம்பி கோ ராமதாஸ் ந ராசவேல் ந சபாபதி ப் பழனியாண்டி து பெ வீரப்பன் கே சுப்பையா ஜி ரெங்கராசன் எ கு திருமலை து மா பெரியசாமி டி வி கோவிந்தராசன் ஆர் குமாரவீரன் டி ராமன் வை துரைசாமி வை கைலாசம் பி மூக்கமுதலியார் ம லோகநாதன் ஆர் ரெங்கசாமி ஆ பெரியசாமி மருதை டி ராமசாமி தொ ராசிலிங்கம் கிருஷ்ணசாமி வெ மாணிக்கம் அ சீ அழகிரிசாமி டி எம் துரைசாமி டி எம் நாகரத்தினம் டி பி எஸ் மாணிக்கம் கோ வேணு டி எஸ் கிருஷ்ணசாமி ஜி ராமானுஜம் ரா நாராயணன் ஆர் பெரியசாமி ரா நடேசன் தொ துரைசாமி என் எஸ் சித்தையன் நி கு கிருஷ்ணசாமி ராமசாமி பெருமாள் செ கு செட்டி மு சுப்பிரமணியன் டி ஜி நாராயணன்.

மருதங்குடி:

பெரி சு சங்கரன் சோ ராமன் சி ஆ வேலன் பெரி ஆறுமுகம் ஆ இராமசாமி ப சின்னையா செ வைரவன்.

வேலூர்:

சா சுப்ரமணியன் போ சுப்ரமணியம் கோ கிருட்டினன் மா பா சாரதி என் ரங்கசாமி ஆர் கண்ணன் எம் கந்தசாமி வி பி முனுசாமி எம் ஜெயராம் ஏ பொன்னுசாமி டி சுப்ரமணியம் ஆ சி மோகனராசு சுந்தர மீனாட்சி அம்மாள் கண்ணம்மாள் ஆறுமுகம் கண்ணகி திங்களரசு திருநாவுக்கரசு

நடராசன் குப்புசாமி நாகேந்திரன் எஸ் சண்முகம் ஈ திருநாவுக்கரசு.

**கண்டனூர்:**
பெ ரெ பெ திருமலை எம் எஸ் பழனிசாமி.

**வெல்லச்சேரி:**
எம் வி சண்முகம் எ கணேசன் சி நடேசன் கே ராதாகிருஷ்ணன் டி மகாலிங்கம் ஜி மகாலிங்கம் எ பார்த்தசாரதி கே ராஜு ஜி பரசுராமன் எம் கிருஷ்ணன் ஜி கமலவல்லி அம்மாள் கே ரூபாவதி அம்மாள் பி கருணாகரன் எஸ் ரேணுகாதேவி கே கோமதி.

**மண்டபம் கேம்ப்:**
எ எஸ் அய்யா அ பி ஈ முத்து எஸ் ஞானசவுந்திர அம்மாள் பி சுப்பையா எஸ் செல்லையா எஸ் புருஷோத்தமன் அருமை நாயகம் லீலாவதி கே முத்தையா சவரிமுத்து காசி வேல் பி அரிகேசவன் கோபால் ஆர் எஸ் சுப்பையா எஸ் என் சுப்பையா ஜானகி அம்மாள் சுசிலாதேவி எம் கே கே கன்னையா ஆர் எஸ் எஸ் சண்முக சுந்திராஜ் என் கோதண்டபாணி.

**பொன்னமாப்பேட்டை:**
க பெ சின்னசாமி எம் இ ஏகாம்பரம் நாகம்மாள் வி கே வெங்கடப்பன் பிள்ளாரி குருசாமி எ பெருமாள் ந ராமசாமி சின்னப்பா எ எ கந்தராசு பி கே மன்னார் ல சித்தையா எம் பி வீரமணி மழையம்மாள் எம் பி சின்னப்பன் அத்தாய் புஷ்பாள் பழனியம்மாள் எம் பி சித்தையன் எம் பி ஆறுமுகம் எம் பி பழனியப்பன் கே ஆர் குப்புசாமி டி பி ராஜு அ சி அருணாசலம் அர்த்தநாரி கே ஆர் ராமண்ணா எ எஸ் மாணிக்கம் ஜி எஸ் பிள்ளையார் செட்டி கே வி கந்தசாமி வி கே தர்மலிங்கம் எஸ் பி ராமசாமி கே ஆர் பத்மையா நாகராசு வி டி பால்சாமி ம வை வரதய்ய செட்டி முத்தியாலு சாமி வி எல் ராசு குப்புசாமி சின்னராஜு கே பி மாணிக்கம் வி கே கோபால்சாமி கே பி பழனிசாமி பி வி சுந்திரய்யா பி வி ராஜு காவேரியம்மா ருக்கம்மா திராவிட செல்வம் வரதராசலு அம்மாயி அம்மாள் சின்னையா துளசியம்மாள் கே என் நாகய்யன்.

**திருச்செம்பொன்பள்ளி:**
ரா சிவகடாக்ஷம் து ராமசாமி சி கோ ராமானுசம் பி சிகாமணி கு சின்னதம்பி ரா கோவிந்தசாமி டி கே ராமலிங்கம் கு ராமகிருஷ்ணன் ஜி பூபதி என் சாமிதுரை எஸ் கோவிந்தராசு, க சண்முகம்.

**நாகபட்டணம்:**
ஆர் வி கோபால் டி கே விசையராகவலு வெங்கட்டசாமி எஸ் அருணாஜலம் பி கே பக்கிரிசாமி மா மலைக்கொழுந்து நா சஞ்சீவி எஸ் பி கண்ணையன் ஆ வெங்கிடாஜலம் வி எம் சதாசிவம் கொ பக்கிரிசாமி எ ஆர் ரெத்தினசாமி ஆர் பாப்பு ரெங்கராஜன் வி பிச்சை க ஆறுமுகம் ஆர் கிருஷ்ணமூர்த்தி எஸ் வெங்கிட்டு பி செ கொழந்தைசாமி இ ரா சோமசுந்தரம் கே தியாகராஜன் சி இலக்குவன் கோவைத்திலிங்கம் கோ தர்மலிங்கம் வி கோவிந்தராசு ம முருகையன் து பாலகுருசாமி வே பாலகிருஷ்ணன் எஸ் பி திருநாவுக்கரசு மு ராமகிருஷ்ணன் டி கணேசன் ஆ நடராஜ செட்டியார் எ விட்டோபா எஸ் முருகையன் டி கே தங்கவேலு ரா தீனதயாளு தி நா இராமானுஜம் ச கோவிந்தராஜன் எம் கமலம் ஆர் பார்த்தசாரதி ஜெயபாலு மெய்கண்டவேலு கொ ரெத்தினவேலு ஆர் சவுந்திராஜன் சரோஜினி ராஜேந்திரன் பொன்னுசாமி எஸ் கோவிந்தராசு வி பி தாமோதரன் வெ பக்கிரிசாமி.

**திருச்செங்கோடு:**
எஸ் கே வரதராசலு ராசம்மாள் வரதராஜலு டி வி வேணுகோபால் டி. வி சுசிலா டி எஸ் சொக்கலிங்கம் நாராயணன் வி என் முத்துஞ்சப்பன் டி கே கைலாசம் டி ஜி அர்த்தநாரி டி ஆர் ஆறுமுகம் என் கே பி வேல் வி கே வெங்கடாசலம் ஆறுமுகம்.

**மேலகற்கண்டார்கோட்டை:**
மா அய்யம்பெருமாள் எ சுந்தரம் வி தட்சணாமூர்த்தி மா தெட்சணாமூர்த்தி எம் வீரபாலன் ப நாகராசன் எஸ் ராமசாமி கே துரையரசு வி எம் சங்கரன் கி அட்சயலிங்கம் ம கோவிந்தசாமி ஜி வரதராசன் பி ராமசாமி கே பாலகிருஷ்ணன் எஸ் தியாகராசன் டி பெருமாள் என் ராமலிங்கம் எம் எஸ் லிங்கம் எஸ் மாணிக்கம் துரைசாமி கோசங்கரன் குழந்தையா ரங்கசாமி வி கே தட்ணாமூர்த்தி ஆர் சுப்ரமணியன் எஸ் கன்னையன் வி பாலசுப்ரமணியன் வி தெட்சணாமூர்த்தி எஸ் சுந்தராஜு எ கோவிந்தசாமி டி ஆர் ராமராஜ் பி சுந்தரம் பி மாதவன் கே ரங்கராஜ் ஜி ரெங்கநாதன் ராஜம்மாள் எஸ் கிருஷ்ணசாமி ராமசாமி எ துரைசாமி கு சின்னசாமி உடையார்.

**பொள்ளாச்சி:**
பி என் ராமானுசம் எசோதை பி என் ஆர் சாவித்திரி எத்திராஜலு அம்மாள் அழகிய மணவாள நாயக்கர் நல்லையா பி நடராசு செட்டி என் ராமலிங்கம் ஆ தி அருணாசலம் எஸ் தியாகராசன் எஸ் கே சாமி பி ரங்கசாமி நாயக்கர் பி நாராயணசாமி நாயக்கர் என் எஸ் சுந்தரம் ஆறுமுகம் சுந்தரம் திருமலைசாமி பி எம் திருமூர்த்தி எம் நாச்சிமுத்து ஆர் ஆறுமுகம் வி எஸ் கிருஷ்ணசாமி தங்கமுத்து கே நஞ்சப்பன் கே நடராசன் டி ராமானுசம் எ கே கோவிந்தன் எ ரே ஜி சி எஸ் மாணிக்கம் பி நடராசன் பி ஆறுமுகம் பி வி செந்தில் நாயகம் தி முருகேசன் எஸ் பங்காருசாமி நாயுடு பா கருப்புசாமி கிருஷ்ணமூர்த்தி என் முனியப்பன் கே கந்தசாமி.

**நாராயணபுரம்: (மூன்றாவது)**
என் பி செங்கப்பன் எம் வி ராமகிருட்டினன் டி தனபால் பொன்னையா காளிமுத்து டி சகாதேவன் தாசப்பன் எஸ் ராசு நாயுடு ஆர் அப்பாவு நாயுடு ஆர் ஜெயராமன் எ ராமானுசம் எ ராமசாமி.

**வில்லியனூர்: (பி. இ.)**
ஜி செமனகிரி ஆ தண்டபாணி கோ கோவிந்தன் இரா நரசிங்கம் வெ தசரதன் சி பெருமாள் சு கனகசபை அ ஆறுமுகம் கி கனகராசு க மாசிலாமணி மு ரத்தினம் வெ அயோத்திராமன் ஆ தனலட்சுமி ஆ வேதநாயகி ஆ மகாலட்சுமி உலகநாயகி ஆ ஆனந்தநாயகி.

(தொடரும்)

---

சிவாஜி கண்ட
இந்து ராஜ்யம்

15-12-45 சனி இரவு 8-மணிக்கு செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் தளபதி சி. என். ஏ. எழுதிய "சிவாஜி" நாடகம் நிகழும்.

நன்கொடையாளருக்குப் பிரத்யேக இடம் ரூபாய் 10 முதல்.

மற்ற டிக்கட்டுகள்: 5-8-0, 2-4-0, 1-2-0, 0-9-0.

குறிப்பு: 1-2-0, 0-9-0 டிக்கட்டுகள் விற்பனையாகி விட்டன.

---

சென்னைத் தோழருக்கு!

'சிவாஜி' நாடகம் டிக்கட்டுகளை விற்பனைக்கு வாங்கியுள்ள தோழர்கள் அனைவரும் விற்ற டிக்கட்டுகளுக்கான பணத்தையும் மீதியுள்ள டிக்கட்டுகளையும் தயவு செய்து 13-12-45 வியாழக்கிழமை இரவுக்குள் என்னிடம் சேர்த்துவிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

என். வி. நடராஜன், 18. பெருமாள்முதலிதெரு, ஜி.டி. சென்னை, பெத்துநாயக்கன்பேட்டை.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.